# மெதிரிகிரிய பிரதேச சபை

## பொலநறுவை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 06 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 22 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் காணப்படுகின்ற என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களை நோக்கில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மெதிரகிரிய பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிக்க என்னால் முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளின் பொழிப்பு கீழே தரப்படுகின்றன.

| | விடயங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|
| | | ரூபா |
| (அ) நிதிக் கூற்றுக்களிலுள்ள விடுபாடுகள் | 03 | 473,446 |
| (ஆ) நிதிக் கூற்றுக்களிலுள்ள விடுபாடுகள் | 03 | கணிப்பிடப் பட்வில்லை |

#### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1 ஆண்டிற்கு மேல் செலுத்த வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 1,441,435 ஆகும்.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளன்மை

ரூபா 47,499,942 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களிற்கான தேவைப்பட்ட சான்றுகள் சமர்ப்பிக்காமை காரணமான கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்யமுடியவில்லை.

### 1.3.4 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் 1988 | |
| விதிகள் 205, 214 மற்றும் 218 | சபைச் சொத்துக்களின் பூரண அளவை நடாத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 396 | வழங்கப்பட்டு ஆனால் 6 மாதங்களிற்கு மேல கொடுப்பனவிற்காக மக்கள் வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ரூபா 5,150 பெறுமதியான 2 காசோலைகள் நிதிப்பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்திற்கு மேலான மீண்டெழும் செலவினமிகை ரூபா 2,782,333 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவு ரூபா 786,105 ஆக இருந்தது.

## 2.2. வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவற்றின் தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ள படியானது | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய நிலுவை | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ள படியானது | 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 706 | 735 | 2,550 | 706 | 649 | 2,267 |
| (ii) | குத்தகை வாடகைகள் | 3,184 | 1,618 | 183 | 1,951 | 1,299 | 190 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,180 | 763 | - | 925 | 726 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 9,299 | 16,213 | 2,505 | 17,761 | 14,237 | 1,827 |

### 2.2.2 நீதி மன்றத் தண்டப்பணம்

2010 ஒக்டோபர் மாதம் வரை பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் 02 நீதவான் நீதி மன்றத்தால் சேகரிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட ரூபா 779,796 தொகையான நீதி மன்ற தண்டப்பணங்கள் சபையால் பெறவேண்டியவையாக இருந்தது. 2010 ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரை ஹிங்குராங்கொட நீதவான் நீதி மன்னறத்திலிருந்து பெறவேண்டிய தண்டப்பணங்கள் மற்றும் 2010 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதத்திற்காக பொலநறுவை நீதவான் நீதிமன்றத்திலிருந்து பெறவேண்டிய தண்டப்பணங்கள் இனங்காணப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 முத்திரைக் கட்டணங்கள்**

2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 764,050 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பதிவாளர் நாயத்திடமிருந்து பெறவேண்டியவையாக இருந்ததுடன் 2010 திசெம்பர் 31 வரை இனங்காணப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 வியாபார அனுமதிப்பத்திக் கட்டணங்களும் கைத்தொழில் வரியும்**

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகளின் 67 ஆம் பிரிவின்படி மீளாய்வாண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திக் கட்டணங்கள் மற்றும் கைத்தொழில் வரி என்பன வருடாந்த அளவீடு மேற்கொள்வதன் மூலம் தயாரிக்கப்பட்ட வீழ்ச்சி மற்றும் அதிகரிப்பு உள்ளடங்க வியாபார மற்றும்கைத்தொழில் இடங்களின் பட்டியல் அடிப்படையில் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 தண்ணீர் வரி**

(அ) மீளாய்வாண்டுத் தொடக்கத்தில் தண்ணீர் வரிகளின் நிலுவை ரூபா 1,441,301 ஆனதுடன் ஆண்டின் இறுதியளவில் ரூபா 1,725,420 இற்கு 19 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பதிவேடுகளின்படி, மீளாய்வாண்டிற்கான தண்ணீர் வரியிலிருந்தான வருமானம் ரூபா 3,322,386 ஆளதுடன் தண்ணீர் வழங்கல் மீதான மீண்டெழும் செலவினம் ரூபா 3,804,013 ஆகும். ஆதலால், தண்ணீர் வழங்கலில் ரூபா 481,627 தொகையான செயற்பாட்டு நட்டம் ஏற்பட்டிருந்தது.

**2.2.6 வரிகள்**

மீளாய்வான்டு தொடக்கத்தில் வரியிலிருந்தான வருமான நிலுவை ரூபா 2,266,944 ஆனதுடன் ஆண்டின் இறுதியளவில் ரூபா 2,550,318 இற்கு 12 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது சேகரிக்க வேண்டிய வருமானத்தில் 11 சதவீதம் மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்தது.

**2.2.7 வேறு வருமானம்**

ரூபா 22 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட காபோனிக் உரச் செயற்திட்டத்திலிருந்து மீளாய்வாண்டு மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 500,000 ஆன போதிலும் எவ்வித வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம் முரண்களுடன் சேர்த்து கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | பாதிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் | பாதிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| **மீண்டெழும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 10,648 | 11,350 | (702) | 10,171 | 9,959 | 212 |
| ஏனையவை | 11,596 | 10,762 | 834 | 11,144 | 7,738 | 3,406 |
| உப மொத்தம் | 22,244 | 22,112 | 132 | 21,315 | 17,697 | 3,618 |
| மூலதனச் செலவினம் | 17,000 | 69,394 | (52,394) | 44,224 | 14,331 | 29,893 |
| முழு மொத்தம் | 39,244 | 91,506 | (52,262) | 65,539 | 32,028 | 33,511 |

## 2.4 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியின் தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | ஊழியர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|---|
| (i) | நிறைவேற்றுனர் | 01 | - |
| (ii) | துணைநிலையினர் | 05 | 08 |
| (iii) | ஆரம்ப தரங்கள் | 15 | 23 |
| (iv) | ஏனையவை (அமைய, சமயாசமய, தற்காலிக) | - | 23 |

| | |
|---|---|
| 21 | 54 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பயன்படுத்தப்படாத பௌதீக வளங்கள்

ரூபா 353,000 பெறுமதியில் மதிப்பிடப்பட்ட 2 மோட்டார் வாகனங்கள், ரூபா 451,000 பெறுமதியில் மதிப்பிடப்பட்ட அரிசி உற்பத்தி இயந்திரம்மற்றும் ரூபா 5,530,000 பெறுமதியான கட்டிடங்கள் என்பன பயன்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வில் வெளிப்பட்டது.

### 2.5.2 அறவிடவேண்டிய உத்தியோகத்தர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய கணக்கின் பெறுமதி ரூபா 1,311,647 ஆக இருந்ததுடன் அவற்றில் 1 ஆண்டிற்கு மேல் நிலுவையாக இருக்கின்ற மீதிகள் ரூபா 197,868 ஆகும்.

## 2.6 மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் பாவனை

சபையின் 8 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் சபையின் அலுவலக வேலைகளில் ஈடுபடுத்துவதற்கு மேலாக வருமானம் உழைக்கின்ற ஏனைய சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள போதிலும் சபையானது அந்த வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் வாடகைக்கு விடல் மற்றும் வாடகை சேகரித்தல் என்பவற்றின் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பினபற்றப்பட்டிருக்கவில்லை. அத்தகையவாறு மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் பாதுகாப்பு மற்றும் உழைக்கும் வருமானங்களின் சரியான தன்மை என்பன உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.7 செயலாற்றல்

### கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் இன்மை

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு மற்றும் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5(1) ஆம் பந்தியின்படி கீழ் பிரதேச சபைகளின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் அடுத்துவரும் ஆண்டில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை உள்ளடக்கிய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக சபையின் குறிக்கோள்களை எய்துகையில் நிதி, இலக்கிடப்பட்ட மனித மற்றும் பௌதீக வளங்கள் என்பவற்றின் முறையான முகாதைத்துவத்திற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் (நிதி மற்றும் பௌதீகம்) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் சோரப்படுகின்றன.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) ஒப்பந்த நிர்வாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு